**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

**SC. 32/2023 தேதி 08.01.2026**

**எ.சா. 1 –** வெங்கடலட்சுமி (A3)

**( PW 1 க்கு தமிழ் மொழி சரிவர தெரியாததால் நீதிமன்றத்திற்கு உதவியாக இரு தரப்பு வழக்கறிஞர்கள் சம்மதத்துடன் வழக்கறிஞர். திரு. C.முரளி MS.No. 1266/2020 என்பவர் நீதிமன்றத்திற்கு உதவியாக மொழி பெயர்த்து தெரிவித்தார். அவ்வாறே பதிவு செய்யப்பட்டது. )**

**எ.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. எனக்கு வழக்கு விவரம் தெரியாது. எனது சகோதரர் கிருஷ்ணமூர்த்தி பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சம்மந்தம் உள்ளது. அந்த உரிமையியல் வழக்கு சம்மந்தமாக புகார்தாரர் எங்களை மிரட்டியதாக நான் காவல் நிலையத்தில் எந்தவொரு புகாரும் கொடுக்கவில்லை. இந்த குற்ற வழக்கிற்கு பின்னர் தான் உரிமையியல் வழக்கில் இவ்வழக்கில் புகார்தாரரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த குற்றவியல் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக தான் அந்த உரிமையியல் வழக்கில் புகார்தாரரை பிரதிவாதியாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur